# ‘திராவிட மாடல்’ ஆட்சியில் பொருளாதார வளர்ச்சி குறித்து நாளேடுகள் வழங்கும் நற்செய்திகள்!




## திருமயம் - ஆலங்குடி- அறந்தாங்கி தொகுதிகளில்

# வாக்களித்த பொதுமக்களுக்கும், உழைத்த உடன்பிறப்புகளுக்கும் நன்றி!

## புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!

புதுக்கோட்ட, ஏப். 30 -

தமிழ்நாட்டின் உரிமைகளை மீட்டெடுக்கவும், மாநிலத்தின் வளர்ச்சி, முன்னேற்றம் மற்றும் சமூக நல்லிணக்கத்தைப் பாதுகாக்கவும் உறுதுணையாக நின்று, மதச் சார்பற்ற முற் போக்கு கூட்டணி வேட் பாளர்களுக்கு வாக்களித்த பொதுமக்களுக்கு புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளர் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தனது நன்றியைத் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை யில் கூறியிருப்பதாவது:

“நடைபெற்று முடிந்த சட்டமன்றத் தேர்தலில், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் திருமயம் சட்ட மன்ற தொகுதியில் கழக வேட்பாளராக போட்டியிட்ட நான் (எஸ்.ரகுபதி) வெற்றியின் சின்னமான உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டேன். ஆலங்குடி சட்டமன்றத் தொகுதியில் கழக வேட்பாளராக உதயசூரியன் சின்னத்தில் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன்போட்டியிட்டார். அறந்தாங்கி சட்டமன்ற தொகுதியில் காங்கிரஸ் சார்பில் எஸ்.டி.ராமச்சந்திரன் கை சின்னத்தில் போட்டியிட்டார்.

3 வெற்றி வேட்பாளர்களுக்கும் வாக்குகள் அளித்துள்ள வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும் எனது மன மார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், தேர்தல் களத்தில் வெற்றி ஒன்றையே இலக்காகக் கொண்டு, பசி, தூக்கம் பாராமல் அயராது உழைத்த கழக நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் கூட்டணிக் கட்சிகளின் அனைத்துப் பொறுப்பா ளர்களுக்கும், தோழர் களுக்கும் எனது அன்பை யும், நன்றியையும் உரித் தாக்குகிறேன். இவ்வாறு புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழக செயலாளர், அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்துள்ளார்.

## புதுக்கோட்டை- விராலிமலை- கந்தர்வக்கோட்டை தொகுதிகளில்

# வாக்களித்த பொதுமக்களுக்கும், உழைத்த உடன்பிறப்புகளுக்கும் நன்றி!

## புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் அறிக்கை!

புதுக்கோட்டை, ஏப். 30 -

தமிழ்நாட்டின் உரிமைகளை மீட்டெடுக்கவும், மாநிலத்தின் வளர்ச்சி, முன்னேற்றம் மற்றும் சமூக நல்லிணக்கத்தைப் பாதுகாக்கவும் உறுதுணையாக நின்று, மதச் சார்பற்ற முற் போக்குக் கூட்டணி வேட் பாளர்களுக்கு வாக்களித்த பொதுமக்களுக்கு புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லப் பாண்டியன் தனது நன்றியைத் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

“நடைபெற்று முடிந்த சட்டமன்றத் தேர்தலில், மதச்சார்பற்ற முற்போக் குக் கூட்டணியின் சார்பில் விராலிமலை சட்டமன்ற தொகுதியில் கழக வெற்றி வேட்பாளராக போட்டியிட்ட நான் (கே.கே.செல்லப்பாண்டியன்) வெற்றியின் சின்னமான உதய சூரியன் சின்னத்தில் போட்டியிட்டேன்.

புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் கழக வெற்றி வேட்பாளராக உதயசூரியன் சின்னத்தில் டாக்டர் வை.முத்துராஜா போட்டியிட்டார். கந்தர்வக் கோட்டை சட்டமன்றத் தொகுதியில் இந்திய கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் சார்பில் எம்.சின்னத்துரை போட்டியிட்டார்.

3 வெற்றி வேட்பாளர்களுக்கும் வாக்குகள் அளித்துள்ள வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும் எனது மன மார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், தேர்தல் களத்தில் வெற்றி ஒன்றையே இலக்காகக் கொண்டு, பசி, தூக்கம் பாராமல் அயராது உழைத்த கழக நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் கூட்டணி கட்சிகளின் அனைத்துப் பொறுப்பா ளர்களுக்கும், தோழர்களுக்கும் எனது அன்பையும், நன்றியையும் உரித் தாக்குகிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே. செல்லப்பாண்டியன் தெரிவித்துள்ளார்.

# வெங்காயம் உடல் வெப்பத்தை தணிக்கும் என ஒன்றிய பா.ஜ.க. அமைச்சரின் சர்ச்சைப் பேச்சு!

## மருத்துவர்கள் கண்டனம்!

போபால், ஏப்.30-

மத்திய பிரதேச மாநிலம் பிச்சோரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய ஒன்றிய தொலைதொடர்புத் துறை அமைச்சர் ஜோதிர்ராத்திய சிந்தியா, 124 டிகிரி பாரன்ஹிட் வெயில் அடிச்சாலும், தனது காரில் ஏசி போட்டு பயணிப்பதில்லை என்றும், பாக்கெட்டில் ஒரு பெரிய வெங்காயத்தை வைத்திருந்தாலே உடம்பு குளிர்ச்சியாக இருக்கும் என்றும் கூறினார். அமைச்சரின் இந்த பேச்சு சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

இதுதொடர்பாக கருத்து தெரிவித்துள்ள மருத்துவர்கள், வெங்காயத்தைப் பாக்கெட்டில் வைப்பதற்கும், உடல் வெப்பநிலையை ஒழுங்குபடுத்துவதற்கும் அறிவியல் பூர்வமான சம்பந்தம் இல்லை என்றும், உடலை குளிர்ச்சியாக வைக்கத் தண்ணீர் குடிப்பது, பருத்தி ஆடைகள் அணிவது மற்றும் வெயில் காலத்தில் வெளியே போகாமல் இருப்பது போன்ற வழிகளைப் பின்பற்றினால்போதும் என்று தெரிவிக்கின்றனர்.

